அல்லது வேலை வாய்ப்புப் பெருதவர்களுக்கு வேறு மாற்றுத் திட்டம் வைத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஏதேனும் ஏற்பாடு செய்ய இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : இதில் வேலை வாய்ப்பு என்பது அல்ல. அவர்கள் 10-வது வகுப்பு படித்ததற்குப் பிறகு 'நேஷனல் டிபன்ஸ் அகாடமியில் சேர்த்துக் கொள்ளப் படுகிருர்கள். பயிற்சி பெற்று பிறகு ராணுவத் துறையில் அதிகாரிகளாக ஆகும் வாய்ப்பு இருக்கிறது. அவர்களை ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் வகையில் நான் முதலில் குறிப்பிட்டபடி தேர்வு நடத்துகிருர்கள், அதிலே 3–5–6 பேர் தான் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள். மற்றவர்கள் எல்லாம் வேறு உயர்நிலைப் பள்ளிகளில் படித்து வரும் மாணவர்களைப் போல் வேறு பல கல்லூரிகளில், வேறு பல இடங்களில் சேருகிருர்கள்.

மகளிர் பள்ளிகள்

***569 வினு—திரு. டி. வி. சம்பத் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாணவியர் தொகை குறைவாக உள்ள மகளிர் பள்ளிகளில் மாணவர்களையும் சேர்த்துக் கூட்டுக் கல்வி பயிலும் (Co-education) பள்ளிகளாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவரவர்களே, இப்படி 10–11 வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படவில்லையென்ருலும், மாணவர்கள் மாணவியர்கள் நெருக்கடி அதிகமாக இருக்கும் இடங்களில் 8-வது வகுப்பு வரையாவது சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற முறையில் திட்டம் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கும் ஊர்களில் 11 வகுப்பு வரை மாணவர்களும் மாணவியர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகிருர்கள். மாணவர்களுக்குத் தனியாக உயர்நிலைப் பள்ளி இருக்கும் ஊர்களில் மாணவியர்களும் சேர வேண்டுமென்ருல்

1973 மார்ச் 30]

ஆய்வாளர்களின் முன் அனுமதி பெற்றுத்தான் சேர வேண்டும். அப்படி மாணவியர்களைச் சேர்க்கும் உயர்நிலைப் பள்ளிகளில் அவர்களுக்கு என்று தனியாக அவர்களுக்கு ஏற்றபடி வசதிகள் செய்து தர வேண்டும். அங்கே பெண் ஆசிரியர்களும் இருக்க வேண்டும். பெண்களுக்குத் தங்கும் இடம் தனியாக இருக்க வேண்டும். இந்த வகைகளில் அங்கு இருந்தால் மாணவியர்கள் ஆய்வாளர்களின் முன் அனுமதி பெற்று சேர்க்க அனுமதிக்கப் படுகிறார்கள்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் மு.ப. 9-30
மாணவர்களும் மாணவியர்களும் தனித்தனியாகப் படிக்கின்ற காரணத்தினால்தான் அவர்களிடையே சகோதர பாசம் இளமையிலேயே மறைந்து விடுகிறது. ஆகவே, இளமையிலேயே சகோதர மனப்பான்மை அளிக்கின்ற வகையில் வட மாநிலங்களிலே இருப்பதைப் போல நமது மாநிலத்திலும் இரு சாராரும் சேர்ந்து படிக்க வகைச் செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எத்தனையோ உயர்நிலைப் பள்ளிகளிலே இரு சாராரும் சேர்ந்துதான் படிக்கிறார்கள். பல கல்லூரிகளிலும் இரு சாராரும் சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. சில இடங்களில் பெண்கள் தனியாகப் படிக்க வேண்டுமென்று விரும்புவதால் அவர்களுக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம்.

வேலூரை மாநகராட்சியாக்கல்

*570 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சி, தொரப்பாடி, சத்துவாச்சாரி, சேண்பாக்கம், காட்பாடி நகர் விரிவு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வேலூர் மாநகராட்சியாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான வேலைகள் எப்போது துவங்கும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) எழவில்லை.